புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜனவரி 09, 2025 • புரட்சி 24 • முழக்கம் 52 • விலை ரூ.3.00

## சென்னையில் மாபெரும் கண்டனக் கூட்டம்!

# சீமான் முகத்திரை கிழிந்தது

தந்தை பெரியாரை அவமதிக்கும் சீமானைக் கண்டித்து திராவிட இயக்கத் தமிழர் பேரவை 5.1.2025 அன்று மாலை சென்னையில் சைதைத் தேரடி தெருவில் பொதுக்கூட்டம் நடத்தியது. அனைத்துப் பெரியார் இயக்கத் தோழர்களும் பொதுக்கூட்டத்துக்கு திரண்டு வந்திருந்தனர். ஏராளமான இளைஞர்கள் பெரியார் படம் போட்ட டீ சட்டையுடன் உணர்வுபூர்வமாக பங்கேற்றனர். பொதுக்கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரின் உரையும் அழுத்தமானதாகவும், உணர்வுபூர்வமாகவும் இருந்தது. சீமான் என்ற ஏமாற்றுப் பேர்வழி நாக்கில் நரம்பின்றி சாக்கடை மொழியில் பெரியாரைப் பேசுவதை இனியும் அனுமதிக்க முடியாது என்று எச்சரிப்பதாக இருந்தது இக்கூட்டம். கூட்டம் கருங்கடலில் மூழ்கி இருந்த நிலையில் ‘சீமான் ரசிகர்கள்’ கூட்டத்துக்கு ஆள் வரவில்லை என்று பொய்யாக வெளியிட்ட ‘ட்வீட்’டுகளை மக்கள் மத்தியில் படித்துக்காட்டிய போது கூட்டத்தினர் கைத்தட்டி எள்ளி நகையாடினர்.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர் உள்ளிட்ட கழகத் தோழர்களும், திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் அருள்மொழி, துணைப் பொதுச்செயலாளர் மதிவதனி, உள்ளிட்ட அனைத்து பெரியாரிஸ்டுகள், இணையதள செயற்பாட்டாளர்கள் என்று ஏராளமான தோழர்கள் திரண்டிருந்த காட்சி உணர்ச்சிமயமாக இருந்தது.

சிற்பி செல்வராஜ் தலைமையில் நடந்தக் கூட்டத்தில் புதுவை தீனா, இரா.உமா, பசும்பொன் பாண்டியன், இந்திரகுமார் தேரடி, மைனர் வீரமணி ஆகியோர் உரையாற்றினர்.

புதுவை தீனா தனது உரையில் புதுவை சிறையில் சீமான் இருந்த போது சிறைக்குள் அவரின் ‘ஒழுக்கக்கேடுகளை’ விளக்கிப் பேசினார். அப்போது காவல்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற சிறை அதிகாரி, சீமான் ஒவ்வொரு நாளும் எப்படி ஒழுக்கக்கேடராக செயல்பட்டார் என்பதை தன்னிடம் விளக்கியதை சுட்டிக்காட்டினார்.

கருஞ்சட்டைத் தமிழர் உமா பேசுகையில், அண்மையில் புத்தகக் காட்சியில் ‘டிஸ்கவரி புக் பேலஸ்’ பதிப்பகம் நடத்திய விழாவில் பேசிய சீமான், பெரியாரையும், கலைஞரையும் கீழ்த்தரமாகப் பேசியதை வன்மையாகக் கண்டித்தார். அந்த விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துப் புறக்கணிக்கப்பட்டு புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் புதுவை மாநில தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பட்டது. கலைஞரை மிக மோசமான மொழிகளில் சீமான் பேசியுள்ளார். புத்தகக் கண்காட்சிக்கு கலைஞர் முதல்வராக இருந்தபோது ஒரு கோடி ரூபாய் நிதியுதவி வழங்கினார். ஒவ்வொரு ஆண்டும் அரசின் நிதிப் பங்களிப்போடு தான் இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது. இலக்கியம், நூல் திறனாய்வு பற்றி பேசப்பட வேண்டிய மேடையை தி.மு.க. அரசியல் எதிர்ப்பு மேடையாக்கினார் சீமான். கடும் எதிர்ப்புகள் எழுந்தன. டிஸ்கவரி பதிப்பக உரிமையாளர் வேடியப்பன், முதலில் பாடப்பட்டது புதுவை அரசு தமிழ்த்தாய் வாழ்த்து என்பது எனக்கு தெரியாது என்றும் அவர் அரசியல் பேசியதை குறுக்கிட்டு தடுக்க முடியாத நிலை ஏற்பட்டது என்றும் அறிக்கை விடுத்துள்ளார். பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் இந்த அறிக்கையைக் கடுமையாக கண்டித்தார் உமா. ’டிஸ்கவரி புக் பேலஸ்’ புத்தகக் கண்காட்சியில் இடம்பெற கண்காட்சி நடத்தும் பபாசி அமைப்புத் தடை விதிக்க வேண்டும். நடந்த நிகழ்வுக்கு மன்னிப்புக் கோர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அ.தி.ம.மு.க. தலைவர் பசும்பொன் பாண்டியன் பேசுகையில் ஈழ விடுதலைப் போராட்டத்துக்காக தான் கைது செய்யப்பட்டதை நினைவு கூர்ந்தார். திராவிடத்தை ஆதரித்த அயோத்திதாசப் பண்டிதரை சீமான் கண்டிப்பாரா? மாட்டார். பெரியாரைப் பிறமொழிக்காரர் என்று பேசும் சீமான், அம்பேத்கரும் பிறமொழிக்காரர் என்று பேசுவாரா? பேச மாட்டார். இப்படிக் கண்டித்தால் தமிழ்நாட்டில் மேடைப் போட முடியாது என்று அவருக்குத் தெரியும். மருத்துவர் ராமதாசைக் கண்டித்து அவர் பேச மாட்டார். வலிமையாக உள்ள ஜாதித் தலைவர்களை கண்டிக்காமல் கலைஞர் குடும்பம் சிறுபான்மைச் சமூகத்தை சார்ந்த குடும்பம் என்பதால் அவர் எதிர்ப்பு வராது என்ற திமிரில் பேசுகிறார். “சீமானே.. நாங்கள் இருக்கிறோம், அந்தத் திமிரை அடக்குவதற்கு’ என்று பலத்தக் கரவொலிக்கு இடையே எச்சரிக்கை செய்தார்.

தொடர்ந்து இந்திரகுமார் தேரடி கருத்துச் செறிவான உரை நிகழ்த்தினார். பெரியாரைப் பற்றிய சீமானின் பொய்யுரைகளை ஆதாரத்தோடு மறுத்தார். ‘யூ டூ புருட்டஸ்’ யூடியூப் நடத்திவரும் மைனர், சீமான் கட்சியினர் நடத்தும் நிறுவனங்களில் பெண்களுக்கு எதிராக நடக்கும் பாலுறவு வன்முறைகளை ஆதாரங்களுடன் விளக்கினார். பாதிக்கப்பட்ட பெண்கள் புகாரளித்தும் காவல்துறை குற்றவாளிகளுக்கு ஆதரவாகவே செயல்படுவதை வீடியோ ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினார்.

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பேசினார், விஜய் கட்சியினால் தனது வாக்குகள் சரிந்துவிட்டதால் மீண்டும் அரசியலில் தன்னை விவாதப் பொருளாக மாற்ற வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு பேசிவருகிறார். அவரது சுயவிளம்பரமே இதற்கான நோக்கம் என்பதைத் தெரிந்தே பேசுகிறோம். இத்தகைய கீழ்த்தரமான பேச்சுகளால் தனது வாக்குச்சரிவை அவரால் ஒருபோதும் நிமிர்த்திவிட முடியாது என்றார். ஈழப் போராட்டம் தீவிரமான 1980, 1990 களில் சீமான் எங்கே போனார்? களத்தில் நின்றாரா? சீமான் பேசும் தமிழ்த்தேசியம் தன்னாட்சியா? தன்னுரிமையா? தனித்தமிழ்நாடா? எப்போதாவது இந்திய தேசியத்தை இவர் எதிர்த்துப் பேசியது உண்டா? தனித்தமிழ்நாடு கேட்ட பெரியார், தமிழ்நாடு நீங்கலாக இந்திய படத்தை எரித்தார். உன்னால் முடியுமா? என்று சுப. வீ கேட்ட போது கைத்தட்டலால் அரங்கம் அதிர்ந்தது.

சென்னையில் வண்ணாரப்பேட்டையில் பாரதியார் பிறந்தநாளை சீமான் கொண்டாடியதன் பின்னால் உள்ள அரசியலையும் - முரண்பாடுகளையும் அம்பலப்படுத்தினார் சுப.வீ.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## விடுதலை இராசேந்திரனுக்கு அரசின் ‘தந்தை பெரியார்’ விருது!

தமிழ்நாடு அரசின் 2024ஆம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் விருது - படிக்கராமு
பேரறிஞர் அண்ணா விருது - எல்.கணேசன்
பாவேந்தர் பாரதிதாசன் விருது - பொ.செல்வராஜ்
பாரதியார் விருது - கவிஞர் கபிலன்
திரு.வி.க. விருது - டாக்டர் ஜி.ஆர்.ரவிந்திரநாத்
அண்ணல் அம்பேத்கர் விருது - துரை.ரவிக்குமார்
முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது - பொதியவெற்பன்
முத்தமிழ் அறிஞர் கலைஞர் விருது - முத்து வாவாசி




பொதுச்செயலாளருக்கு விருது வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், முதல்வருக்கும் நன்றி தெரிவித்து கழக சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தலையங்கம்

# பல்கலைக்கழக உரிமைகளைப் பறிப்பதா?

பல்கலைக்கழகங்களை தமிழ்நாடு அரசிடம் இருந்து விடுவித்து தனது நேரடிக் கண்காணிப்பில் கொண்டுவரப் போகிறது ஒன்றிய பாஜக ஆட்சி. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதோடு, அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் எதிர்ப்போம் என்று அறிவித்துள்ளதைப் பாராட்டி வரவேற்கிறோம்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை தேர்வு செய்யும் குழுவில் மாநில அரசின் பிரதிநிதிகளுக்கு இடமில்லை என்று பல்கலைக்கழக மானியக் குழு ஒரு சட்டத்தைக் கொண்டுவரப்போவதாக அறிவித்துள்ளது. ஆளுநரின் பிரதிநிதி, மானியக் குழுவின் பிரதிநிதி, பல்கலைக்கழகப் பிரதிநிதி என்ற மூவர் மட்டுமே துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுப்பார்களாம். கல்வித்துறை சாராதோரும் துணைவேந்தர்களாகலாம் என்றும் புதிய சட்டம் கூறுகிறது. இதற்கான மசோதா இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

21 பக்கங்கள் கொண்ட சட்டத்துக்கான வரைவு அறிக்கை ஒன்றை கல்வித்துறை அமைச்சகத்திடம் பல்கலைக்கழக மானியக்குழு அளித்துள்ளது. இந்தப் புதியக் கொள்கையை ஏற்காத பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மாநிலக்குழுவின் வரம்பில் இருந்து நீக்கப்பட்டு நிதி வழங்குவது நிறுத்தப்படும் என்றும் இந்த நிறுவனங்கள் தரும் பட்டங்கள் செல்லாது என்று அறிவிக்கப்படும் என்றும் இந்த வரைவுத் திட்டம் கூறுகிறது.

ஏற்கனவே மும்மொழி கொள்கையை அமல்படுத்தாத காரணத்தால் ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய ரூ.2152 கோடி நிதியை விடுவிக்காமல் முடக்கிவிட்டார்கள்.

கல்விப் பொதுப் பட்டியலில் இருப்பதால் மாநில அரசைக் கலந்தாலோசிக்க வேண்டிய தேவை இல்லை என்ற இறுமாப்போடு ஒன்றிய ஆட்சி மிரட்டுகிறது. தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி வந்த பிறகு பல்கலைக்கழக நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் தீவிரம் காட்டுகிறார், ஏற்கனவே தமிழ்நாட்டில் ஆறு பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் இல்லை.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் கிரிமினல் குற்றச்சாட்டுக்கு உள்ளான துணைவேந்தரை அவர் ஆர்.எஸ்.எஸ்.காரர் என்பதால், ஆளுநர் தனது அதிகாரத்தைக் கொண்டு பதவியில் நீடிக்க அனுமதித்து வருகிறார். துணை வேந்தர்களை தேர்வு செய்யும் குழுவில் பல்கலை மானியக் குழுவின் பிரதிநிதி கட்டாயம் இடம்பெற வேண்டும் என்கிறார்.

தமிழ்நாட்டில் இயங்கும் பல்கலைக்கழகங்கள் அவை தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே தன்னாட்சியுடன் செயல்பட்டுவருகின்றன. அதன் காரணமாகவே ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் தனித்தனியான விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அதை சீர்குலைக்கிறது ஒன்றிய ஆட்சி. ஒன்றிய ஆட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழக மானியக் குழுவின் பிரதிநிதி, மாநிலப் பல்கலைக்கழகத்துக்கான துணை வேந்தர்களை தேர்வு செய்வதில் ஏன் இடம்பெற வேண்டும்?

ஏற்கனவே மன்மோகன்சிங் பிரதமராக இருந்த போது 2010இல் மானியக் குழுவின் பிரதிநிதி இடம்பெற வேண்டும் என்று திருத்தம் கொண்டுவரப்பட்டு, அதற்கு எதிர்ப்பு எழுந்ததால் 2013ஆம் ஆண்டில் அதே மன்மோகன்சிங் பிரதமராக இருந்த போதே நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. 2018இல் மோடி ஆட்சியில் பல்கலைக்கழக விதிமுறைகளை மானியக்குழு மாற்றியமைத்த பிறகும் கூட, தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களில் தனித்தனியான வழிமுறைகளே பின்பற்றப்பட்டுவந்தன. பல்கலைக்கழக மானியக் குழுவின் பிரதிநிதி இடம்பெறவில்லை.

2010ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழு துணைவேந்தர்களாக நியமிக்கப்படுவோர், பேராசிரியர்களாக இருக்க வேண்டும் என்று விதியை உருவாக்கினாலும் தமிழ்நாட்டில் அது பின்பற்றப்படவில்லை. மதுரை காமராசர் மற்றும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் அல்லாதவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மானியக் குழு நெறிமுறைகளை உருவாக்கினாலும், மாநில அரசின் முடிவே இறுதியானது என்பதற்கு இவை சான்றுகளாகும்.

ஜெயலலிதா முதல்வராக இருந்த போது பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநர்கள் இருக்க வேண்டும் என்ற மரபை மாற்றி முதல்வரை துணைவேந்தராகும் மசோதாவை தாக்கல் செய்தது. 1994இல் ஆளுநராக இருந்த சென்னா ரெட்டியை திருப்பி அனுப்ப வேண்டும் என்று ஆளுநர் உரையைத் தயாரித்து அதே சென்னா ரெட்டியைக் கொண்டு படிக்க வைத்தார். சட்டக் கடமையை ஏற்று சென்னா ரெட்டியும் உரையைப் படித்தார் என்பது வரலாறு.

துணைவேந்தரை தேர்வு செய்யும் குழுவில் மானியக் குழு உருவாக்கிய விதிமுறைகள் (73(2)) தமிழ்நாடு அரசுக்கு பொருந்தாது என்று திராவிட மாடல் ஆட்சியின் சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டமன்றத்தில் அறிவித்ததோடு அரசாணையும் (எண் 5) வெளியிடப்பட்டது. இப்போது ஒன்றிய ஆட்சி நெறிமுறைகளை கட்டாயப்படுத்தித் திணிக்கிறது.

துணைவேந்தர் நியமனம் தொடர்பான விதிமுறைகளாக இப்பிரச்சனையை சுருக்கிப் பார்க்க முடியாது. உயர்கல்வியில் இந்தியாவுக்கே வழிகாட்டும் மாநிலம் தமிழ்நாடு. மாநிலங்களிடமிருந்து பல்கலைக்கழகங்களை ஒன்றிய ஆட்சி பறித்தெடுக்கும் ஆபத்தான முயற்சி.

காங்கிரஸ் ஆட்சிக்காலங்களில் பல்கலைக்கழக மானியக்குழு, கல்லூரியில் மாணவர், ஆசிரியர் நலனுக்கு ஏராளமான திட்டங்களையும், நிதியுதவிகளையும் வழங்கி வந்தது. இப்போது இத்திட்டங்கள், நிதியுதவிகள் பா.ஜ.க, அரசால் கைவிடப்பட்டுவிட்டன. குறைந்தபட்ச நிதியைக் கூட தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்குத் தரவில்லை. இந்த நிலையில் தமிழ்நாட்டில் சமூகநீதி அடிப்படையில் கட்டி வளர்க்கப்பட்ட பல்கலைக்கழகங்களை ஒன்றிய ஆட்சி தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்.

# தமிழ்நாடு மாணவர் கழக மாணவர்கள் சாதனை



நாசா, ஐஏஎஸ்சி, எஸ்ஐஏயூ இணைந்து நடத்திய பிஎஸ்1 மற்றும் பிஎஸ்2 தொலைநோக்கிகளில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் விண்கற்களை கண்டுபிடிக்கும் போட்டியில் தஞ்சை மாவட்டம், பேராவூரணி அரசு கலை அறிவியல் கல்லூரியில் பிஎஸ்சி கணினி அறிவியல் துறையிலிருந்து சந்தியா, ஷியாம், பிரபாகர், அகிலேஷ்வரன், பிஎஸ்சி வேதியியல் துறையிலிருந்து கோபாலன் ஆகிய தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்களும் இவர்களுடைய ஐன்ஸ்டீன் ஹாக்கிங் அறிவியல் மன்ற ஒருங்கிணைப்பாளர் திரு.கலைச்செல்வன் அவர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

இதில் கூடுதல் சிறப்பாக தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் “3 புதிய” விண்கற்களை கண்டுபிடித்துள்ளதால் அந்த விண்கற்களுக்கு பெயர் சூட்டும் அரிய வாய்ப்பை நமது தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்களுக்கு நாசா வழங்கியுள்ளது. 3 விண்கற்களில் ஒன்றுக்கு “பெரியாரியல்” சார்ந்தப் பெயரை நாசாவிடம் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் பரிந்துரைக்க உள்ளனர். இதற்கு நாசா ஒப்புதல் தரும்பட்சத்தில் வானியல் சார்ந்த ஆராய்ச்சியில் பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியாரின் பெயர் இடம்பெறும் என்றும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் மகிழ்ச்சியாகத் தெரிவித்தனர். போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் கழகத் தோழர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

## முடிகொண்டான் சாரங்கபாணி முடிவெய்தினார்.



பெரியாரின் பெருந் தொண்டரும், தமிழ்நாடு அரசின் ‘நல்லாசிரியர்’ விருது பெற்றவரும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்ததற்காக, தனது மகள், மகனுடனும், கழகத் தலைவர், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் ஆகியோருடன் தடா வழக்கில் சிறை சென்றவருமான முடி கொண்டான் சா.சாரங்கபாணி, தனது 93ஆவது வயதில் 03.01.2025 அன்று தனது இல்லத்தில் முடிவெய்தினார். அவருக்கு நமது புகழ் வணக்கங்கள்.


## புரட்சிப் பெரியார் முழக்கம்

ஆண்டு சந்தா : ரூ.300/-
அய்ந்தாண்டுச் சந்தா : ரூ.1500/-

தொடர்புக்கு :
ஆசிரியர், 15, தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை - 96
பேச : 8973341377

# வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு!

தமிழ்நாட்டின் வளர்ச்சிக் குறித்து சட்ட சபையில் ஆளுநர் உரையில் இடம்பெற்ற முக்கியத் தகவல்களின் தொகுப்பு இது. ஆளுநர் உரையைப் படிக்க மறுத்ததால் பேரவைத் தலைவர் உரையைப் படித்தார்.



### பொருளாதாரத்தில் தமிழ்நாடு முன்னோடி

*நாட்டின் 2வது மிகப்பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இன்று திகழ்கிறது. வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது. முந்தைய ஆண்டுகளில் தேசிய ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 சதவிகிதமாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு, கடந்த 4 ஆண்டுகளில் 9.21 சதவிகிதமாக உயர்ந்துள்ளதே திராவிட இயக்க கொள்கைக்குக் கிடைத்த வெற்றி. இதனை முன்னேற்றிடும் வகையில் எதிர்வரும் 2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்துவதை தமிழ்நாடு தனது இலக்காக கொண்டுள்ளது. மருத்துவம், கல்வி மற்றும் சமூகநலனையும் மேம்படுத்துவதிலும் நாட்டிற்கே முன்னோடியாகத் தமிழ்நாடு விளங்குகிறது.*

*தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்களின் வழியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் எதிர்கால தலைமுறைகளின் வாழ்வை செம்மையாக வடிவமைத்திடுவதற்காக பல முன்னோடி திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். சிறந்த திட்டங்களின் ஒன்றான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் 1.15 கோடி குடும்பங்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 உரிமைத்தொகை வழங்கிவருகிறது. மகளிர் விடியல் பயணத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் தமிழ்நாடு நாட்டிற்கே முன்னோடியாக திகழ்கிறது.*

## கல்விக்கு நிதி மறுக்கும் ஒன்றிய ஆட்சி

*தரமான கல்வியை வழங்குவதில் உறுதியுடன் செயல்படும் தமிழ்நாடு அரசுக்கு ஆண்டில் எந்தவொரு நிதியையும் ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. அரசுப் பள்ளி மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதி மற்றும் போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட மொத்த கல்விச் செலவினையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. கல்வியாண்டுகளில், கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 1,165 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 35,530 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். புதுமைப் பெண் திட்டம் எனும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு அவர்களின் இளங்கலைக் கல்விக் காலம் முழுவதும் மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதனைதொடர்ந்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் 6 ஆம் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி பயிலும் காலத்தில் மாதந்தோறும் 1,000 ரூபாய் உதவித்தொகை வழங்குவதற்கான தமிழ்ப் புதல்வன் திட்டத்தையும் கடந்த ஆண்டு தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நடப்புக் கல்வியாண்டில் மட்டும் 3.52 லட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.*

*நான் முதல்வன் திட்டமானது மாணவர்களைத் தொழில்சார்ந்த திறன் கொண்டவர்களாக மேம்படுத்தி, இந்தியாவின் திறன்மிக்க இளைஞர்களின் தலைநகரமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்தியுள்ளது. 2023-24ம் ஆண்டில், இத்திட்டம் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும், தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, 2,085 கல்வி நிறுவனங்களில் பயிலும் 14.68 லட்சம் மாணவர்கள் தற்போது பயன்பெற்றுள்ளனர்.*

*அனைவரின் வரவேற்பினையும் பெற்ற இத்திட்டத்தின் மூலம் நடத்தப்படும் வளாக வேலைவாய்ப்பு முகாம்கள் வாயிலாக, இதுவரை 2,58,597 வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதில் தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்பட்டு வரும் நிலையில், மாநிலத்தின் முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு தேவையான ஆதரவினை வழங்கவில்லை. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை விடுவிக்கக் கோரி தொடர்ந்து முறையிட்டும், புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்காததைக் காரணமாகக் கூறி, ஒன்றிய அரசு நடப்பு ஆண்டில் இதுவரை எந்தவொரு நிதியையும் விடுவிக்கவில்லை. ரூ.2,152 கோடி அளவில் உள்ள இந்நிலுவைத் தொகையானது, ஆசிரியர்களின் ஊதியம், பள்ளிக் கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் கல்விக் கட்டணத்தைத் திருப்பிச் செலுத்துதல் உள்ளிட்ட பள்ளிகளின் பல்வேறு செயல்பாடுகளுக்கு மிகவும் இன்றியமையாததாகும். ஒன்றிய அரசு இந்த நிதியை வழங்காததால், தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து மாநில அரசே இத்திட்டத்திற்கான ஒட்டுமொத்தச் செலவையும் ஏற்க வேண்டியுள்ளது. இதனால், மாநில அரசின் நிதிநிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.*

*44லட்சம் மாணவர்கள், 2.2 லட்சம் ஆசிரியர்கள் மற்றும் 21,276 பணியாளர்களின் எதிர்காலம் இதில் அடங்கியுள்ளது.*

## தமிழ்நாடு அரசை நிதிக் குழுப் பாராட்டுகிறது.


டாக்டர் அரவிந்த் பனகாரியா தலைமையில் 16வது நிதிக்குழு தமிழ்நாடு வந்தபோது நமது கோரிக்கைகள் அனைத்தும் முன்வைக்கப்பட்டன. அவற்றில் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வை 50 சதவீமாக அதிகரித்தல், நிதிப் பகிர்வுக்கு முற்போக்கான கணக்கீட்டு முறையை பின்பற்றுதல், மாநிலங்களின் செயல்திறனுக்கு உரிய நிதிப் பகிர்வு அளித்தல் போன்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டன. தமிழ்நாட்டின் அறிக்கை குறித்து ஆணையம் தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.

## சிறுபான்மையினர் நலன்

சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான நிரந்தரச் சான்றுகளை இணைய வழியில் எளிமையாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் சிறுபான்மை சமூகங்களின் வழிபாட்டுத் தலங்களை புனரமைத்து பாதுகாக்கும் வகையில் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழடி அருங்காட்சியகம் பெரும் வரவேற்பு பெற்றதையடுத்து, ஆதிச்ச நல்லூர், சிவகளை மற்றும் கொற்கை போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் கொண்டு திருநெல்வேலியில் உலகத்தரம் வாய்ந்த பொருநை அருங்காட்சியகம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. மேலும் ராஜேந்திர சோழனின் கடல் கடந்த வெற்றிப் பயணம், அயல்நாட்டு வணிகத் தொடர்புகளை நினைவுகூரும் வகையில், கங்கை கொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையையும், திருவள்ளுவர் சிலையையும் இணைக்கும் வகையில் நாட்டில் முதன் முதலாக அமைக்கப்பட்ட கண்ணாடி இழைப் பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

## காலை உணவு திட்டம் விரிவாக்கம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் வழியாக தமிழ்நாட்டின் பெயரை வரலாற்றின் பொன்னேடுகளில் பொறிக்கச் செய்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். தற்போது கிராமப்புறங்களில் உள்ள 3,995 அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக, தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 34,987 தொடக்கப் பள்ளிகளில் 17.53 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. தனிச் செயலி உருவாக்கப்பட்டு ஆன்லைன் வழியாக திட்டத்தை அன்றாடம் கண்காணித்து, எந்தக் குறையும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் கவனத்துடன் செயல்படுகிறது அரசு.




## பெரியாரை நோக்கி திரளும் இளைஞர்கள்
## புத்தகக் கண்காட்சியில் பெரியார் நூல்கள் அமோக விற்பனை!

சென்னைப் புத்தகக் கண்காட்சியில் பெரியார் நூல்கள் இளைஞர்களைக் கவர்ந்து நிற்கின்றது என்று “டைம்ஸ் ஆஃப் இந்தியா” ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. 18லிருந்து 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் கூட்டம் பெரியார் நூல் விற்பனைக் கடைகளில் அலைமோதுகிறது. அதே நேரத்தில் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் பக்தி, ஆன்மீக நூலை வாங்குகிறார்கள் என்றும் அந்த ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. பெரியாரிய – கடவுள் மறுப்புக் கொள்கையில் இளம் வயது முதல் ஈர்க்கப்பட்டேன் என்று தனியார் கல்லூரியில் பணியாற்றும் 27 வயது இளைஞர் சவுமியா நாராயணசாமி கூறுகிறார். மதத்தோடு ஜாதி பிணைந்திருக்கிறது என்று அந்த நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

கடந்த காலத்தில் சமூகம், ஜாதி, மதம், பெண்ணடிமை கருத்துகளில் மூழ்கிக் கிடந்தது. “தமிழ்நாட்டு வரலாற்றில் சமூகத்தை வர்ணாஸ்ரமும், ஜாதியும் ஊடுறுவி சிதைத்தது. இப்போது மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். மாற்றம் தொடங்கிவிட்டது” என்கிறார் 19 வயது இளைஞர் கருணாகரன். தமிழ் இலக்கியப் பட்டப் படிப்பில் அவர் முதலாம் ஆண்டு படிக்கிறார். கண்காட்சியில் 100க்கும் மேற்பட்ட அரங்குகளில் பெரியார் நூல்கள் விற்பனை ஆகின்றன. அண்மைக் காலமாக இளைஞர்கள் பெரியார் கொள்கை மீது மிகுந்த ஈடுபாடு ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று பெரியார் பதிப்பக நிர்வாகி சக்திவேல் கூறுகிறார். 120க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களில் பெரியார் நூல்கள் விற்பனைக்கு உள்ளன. புராணம், யோகம், மந்திரம் தொடர்பான நூல்களை 50 வயதுக்கு மேற்பட்டோர் வாங்குகிறார்கள் என்கிறார் ‘சின்மயானந்தா நிறுவன’ நிர்வாகி சாய் தேஜா.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஜெயலலிதா - ஆளுநர் சென்னா ரெட்டி மோதல்

***ஆளுநர் ரவிக்கு உரிய மரியாதையை தமிழ்நாடு அரசு அளித்தும் ஆளுநர் சட்டமன்றத்தை அவமானப்படுத்துகிறார். எடப்பாடி பழனிச்சாமி ஆளுநரை நியாயப்படுத்துகிறார். ஆனால் ஜெயலலிதா முதல்வராக இருந்த 1994இல் ஆளுநரை எப்படி நடத்தினார்? மோதலில் பின்னணி குறித்த ஒரு மீள் பார்வை.***

*1994ஆம் ஆண்டு முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கும் ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் இடையே முரன்பாடு வந்தது. தனது அரசைக் கவிழ்ப்பதற்கு அன்றைய காங்கிரஸ் ஆட்சியால் அனுப்பிவைக்கப்பட்டவர் தான் சென்னா ரெட்டி என்று உறுதியாக நம்பினார் ஜெயலலிதா. இருவரும் பத்திரிக்கை அறிக்கைகள் வழியாக தங்கள் எதிர்ப்புகளை வெளியிடத் தொடங்கினர். ஆளுநரிடமிருந்து அதிகாரங்களைப் பறிக்கும் முயற்சியில் ஜெயலலிதா செயல்படத் தொடங்கினார்.*

*புத்தாண்டு தொடக்கத்தில் சட்டசபை கூட்டத்தொடர் ஆளுநர் உரையோடு தொடங்கும். ( இப்போது ஆர்.என்.ரவி அந்த உரையைத் தான் வாசிக்க மறுத்து வெளியேறினார்.) அப்போது பேரவைத் தலைவராக இருந்த சேடப்பட்டி முத்தய்யா ஆளுநர் உரையே தேவையில்லை என்று கருதி ஆளுநருக்கு அழைப்பு விடுக்காமலேயே சட்டசபையைக் கூட்டினார்.*

*கூட்டத் தொடரில் பல்கலைக்கழக வேந்தராக இருக்கும் ஆளுநர் அதிகாரத்தைப் பறித்து முதல்வரே வேந்தராக இருப்பார் என்ற மசோதா சட்டசபையில் நிறைவேறி சட்டமானது.*

*தமிழ்நாடு அரசு வாய்மொழியாக கீழ்கண்ட உத்தரவுகளை பிறப்பித்ததாக ஆளுநர் மாளிகை குற்றம்சாட்டியது. ஆளுநர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் பங்கேற்கக் கூடாது. அரசு கட்டிடங்களில் ஆளுநர் நிகழ்ச்சிகளை அனுமதிக்கக் கூடாது, ஆளுநருக்கு அரசின் பாதுகாப்புகள் குறைக்கப்பட்டன என்று ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. அன்னை தெரசா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் சென்னா ரெட்டி பங்கேற்ற நிலையில் கல்வி அமைச்சர் பங்கேற்காமல் புறக்கணித்தார்.*

*சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு மாநில அரசு பரிந்துரைத்த மூன்று பெயர்களை ஆளுநர் நிராகரித்தார். நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் உறவினரான குற்றாலிங்கம் பெயர் இடம்பெற்றதே ஆளுநர் புறக்கணிப்புக்கு காரணமாக சொல்லப்பட்டது. சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வெடித்தத் தகவலை தன்னிடம் தெரிவிக்கவில்லை என்று புகார் கூறிய ஆளுநர், முதல்வரை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து அரசின் நிர்வாகத்தைக் குறைகூறினார். முதல்வர் ஜெயலலிதா ஆத்திரத்துடன் வெளியேறினார். அதற்குப் பிறகு ஆளுநர் மாளிகை பக்கம் திரும்பவே இல்லை. தனது நம்பிக்கைக்குரிய தலைமைச் செயலாளரான டி.வி.வெங்கட்ராமன் பதவி காலத்தை நீட்டித்து பிறப்பித்த உத்தரவை கிடப்பில் போட்டார். பிரதமர் நரசிம்மராவிடம் புகார் செய்தார் ஜெயலலிதா.*

*ஆளுநருக்கு குடியரசுநாளில் வழங்கும் அணிவகுப்பில் அமைச்சர்கள் பங்கேற்க ஜெயலலிதா தடை விதித்தார்.*

***(இந்தியா டுடே வெளியிட்ட செய்தி)***

## பேராவூரணியில் பெரியாரியல் பயிலரங்கம்

**பேராவூரணி: பெரியாரின் 51ஆவது நினைவுநாளை ஒட்டி தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியத்தில் மாணவர்களுக்கான பெரியாரியல் பயிலரங்கம் 25.12.2024 அன்று செங்கை க.கதிர்வேல் நினைவு அரங்கத்தில் நடைபெற்றது. முதல் நிகழ்வாக தோழர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.**

**அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்ட அமைப்பாளர் சித.திருவேங்கடம் பெரியார் அறிமுகம் என்ற தலைப்பில் உரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் “திராவிட இயக்க வரலாறு” குறித்தும் “பெரியார் கொள்கையின் இன்றைய தேவை” குறித்தும் உரையாற்றினார்.**

**மதிய உணவிற்கு பிறகு இட ஒதுக்கீடு வரலாறு குறித்து உரையாற்றினார். நிறைவாக மாணவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.**

முதல் பக்கத் தொடர்ச்சி

## விடுதலை இராசேந்திரனுக்கு ஆடை போர்த்தி பாராட்டு!



**தமிழ்நாடு அரசின் தந்தை பெரியார் விருது பெற்ற கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனை மேடைக்கு அழைத்து திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆடை போர்த்தி பாராட்டு தெரிவித்தார்.**

*நாங்கள் எப்போதும் நினைவு நாளை மட்டுமே நினைவில் போற்றுவோம் என்று கூறும் நாம் தமிழர் கட்சி வழமைக்கு மாறாக பாரதியின் பிறந்தநாளைக் கொண்டாடியது ஏன்? அதைப் பெரியார் மீது வசைபாடும் கூட்டமாக மாற்றியது ஏன்? பாரதியார் பிறந்தநாள் டிசம்பர் 11. அந்த நாளில் கூட்டம் நடத்தாமல் டிசம்பர் 20இல் நடத்தியது ஏன்? இதற்கு பின்னால் ஒரு அரசியல் இருக்கிறது. டிசம்பர் 16ஆம் தேதி உள்துறை அமைச்சர் அமித்ஷா, நாடாளுமன்றத்தில் அம்பேத்கரை இழிவுப்படுத்திப் பேசினார். நாடு முழுவதும் கொந்தளித்தது. அந்த நேரத்தில் அமித்ஷாவைக் காப்பாற்ற அவர் அம்பேத்கரை இழிவுப்படுத்தி பேசியதற்கு எதிரானப் போராட்டங்களை திசை திருப்ப பெரியார் எதிர்ப்பை முன்வைக்கவே பாரதி பிறந்தநாள் கூட்டத்தை நடத்தியுள்ளார் சீமான்.*

*சரி; எப்போது பாரதி மீது சீமானுக்குப் பற்று வந்தது? அவர் கட்சி தொடங்கிய போது வெளியிட்ட அதிகாரப்பூர்வமான மலரில் அக்கட்சி பாராட்டி ஏற்கும் தலைவர்கள் படம் இடம்பெற்றுள்ளன. முதலில் இடம்பெற்றுள்ள படம் பெரியார் படம். 64 பேரில் பாரதி படம் இடம்பெறவில்லை. பெரியாரை ஏற்றுக்கொண்ட சீமான் - பெரியாரை மிகக் கேவலமாக பேசுகிறார். பாரதியை அங்கீகரிக்காதவர் பாரதிக்கு விழா எடுக்கிறார்.*

*சரி, ”நீங்கள் பேசும் பாரதி தமிழ்த்தேசியம் பேசியவரா? பாரத்தாய்க்கு வாழ்த்துப் பாடியவர். அவர்தான் உங்கள் தமிழ்த்தேசியத்தின் வழிகாட்டியா? தமிழ் மொழிக் குறித்து பாரதி பாடியது 5 பாடல்கள் மட்டுமே. அவர் எழுதிய பக்திப் பாடல்கள் 23, அதில் 21 பாடல்கள் இந்துமதம் சார்ந்தது. அவரது உரைநடையில் சமஸ்கிருதம் ஒன்று மட்டுமே தெய்வ மொழி என்கிறார். சீமான் இதை ஏற்றுக்கொள்கிறாரா?” என்று கேட்டார்.*

*சீமான் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியக் கருத்துகளைத் தலைப்பு வாரியாகத் தொகுத்து காணொளிக் காட்சி ஒன்று திரையிடப்பட்டது. சீமானின் முகத்திரையைக் கிழித்துக்காட்டியது அந்த காணொளி.*

*அடர்த்தியாக திரும்பும் இடமெல்லாம் கருஞ்சட்டையுடன் - பெரியார் படம் போட்ட சட்டையுடன் இளைஞர்கள் திரண்டிருந்தக் காட்சி, பெரியாரை இளைய சமுதாயம் கையில் எடுத்துவிட்டதை உறுதிப்படுத்தியது.*

***நமது செய்தியாளர்.***

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 11, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran